**பகுதி 2**

**உ.ஷே. தாஹிர்பாஷாவின் கவிதைகள்** தொடர்கின்றன....

## புத்தாண்டு!

இரவும் பகலும் கொண்டு,
மணித் துளிகளால் பிரித்தோம்!
மணித்துளிகளைக் கொண்டு,
நாட்களைக் கண்டோம்!
நாட்களைக் கொண்டு;
வாரங்கள் மாதங்கள் கண்டோம்!
மாதம் கொண்டு, வருடங்கள் கண்டோம்!

நாம் கண்ட வருடத்தை;
புதியதாய் எண்ணி,
வணங்கியும் நின்றோம்!


நேற்றும் இன்றும் - நம்
மனதால் செயலால்;
அமையாதென்றால்- ஒரு
புதிய தேதி என்ன செய்து விடும்? - ஒரு
விடியல் வாழ்க்கையை மாற்றுமென்றால்,
உழைப்பின் பொருளென்ன?

எதைக் கணடு இந்தத் தலை
தெறிக்கும் ஆட்டம்?
எதைப் பெற்று விட்டாய், என்று
இந்த ஆட்டம்? - ஆடிக் களைத்தாலும்;
உழைத்தாலே அடுத்த வேளை உணவு!

உதயத்தைக் கண்டவருக்கு,
எந்நாளும் புதுநாள் தானாம்!

விடியலைக் காணலாம்!
படைத்தவனை வணங்கலாம்!
உழைப்பினைக் கொடுக்கலாம்!
உயர்வினைக் காணலாம்!

—0—



## நான் யார்?

நான் என்பது என்ன?
இந்த உடலா!
உடலை இயக்கும் உயிரா?
இடப்பட்ட பெயர் உடலுக்கா? உயிருக்கா?
உடலுக்கென்றால், உயிரற்ற;
உடலைப் பிணமென்றழைப்பதேன்?

உயிரும் உடலும் ஒன்றென்றால்;
உடல் அழுக உயிர் பிரிவதேன்?
வலியால் துடித்த உடல்,
உயிர் பிரிந்தால் அடங்குவதேன்?


வலியின் காரணமே உயிர் தானா?
அன்பே அழகே என்றவரெல்லாம்;
நாலடி நகர்ந்தே நின்றார் தீட்டென்று!

நெருங்காதே நோய் தொற்றுமென்றார்!
ஆறத் தழுவிய உடல் பார்த்து,
ஓர் நொடியும் பிரியாத உறவெல்லாம்;
ஓர் இரவும் உடல் வைக்க மறுப்பதேன்?

காடு வரை வந்தப் பிள்ளை;
தீ வைக்க மறுப்பதில்லை!

மண்ணிட்டுப் புதைக்க எதிர்பதில்லை!
ஏதென்று அறியாமல் காலம்; கடத்திட்டோம்!
ஞானத்தை எட்டு முன்,
மரணத்தை எய்திடோம்!

—0—




# செய் நன்றி



ஐயிரண்டு மாதம்
அன்னையவள் சுமப்பாள்!
ஆளாகி நிற்கும் வரை,
தந்தையவன் சுமப்பான்!
சிறுகதைச் சொல்லி,
உறங்க வைக்கும் பாட்டி!

சிந்தையைத் தூண்டும்
செய்திச் சொல்லும் தாத்தன்
துள்ளி விளையாட,
தவறி விழும் போது;
அள்ளி அணைத்திடும் மாமன்!



அகரம் சொல்லி,
அறிவை ஊட்டி;
ஆளுமை தந்த ஆசான்,

இத்துணை மனிதர்;
இணையாய் நின்று,
வளர்த்து விட்டப் பின்னே
தானாய் பிறந்து,
தானாய் வளர்ந்த,
கதையைச் சொல்லி திரிவார்!



மரணம் வந்தால்;
சுமந்துச் செல்ல
நால்வர் இங்கு வேண்டும்! - இந்த
உண்மை உணர்ந்தால்,
உறவின் மேன்மை புரியும்!

— 0—



# சிறு துளி

சிறு துளி ஒன்று;
உடலினில் புகுந்து,
இதயத்தை நிறுத்திடுமோ! - அதைப்
பொடி பட நசுக்கி,
உயிரினைக் காக்க;
மருந்தொன்று கிடைக்கலையே!


தினம் தினம் நூறு,
உயிர்களை இழக்க;
மனமிங்கு ஒப்பலையே!
இறையவன் செயலென;
மனதினைத் தேற்றி,
வாழ்ந்திட முடியலையே!



கனவிலும் காணா;
கொடுமைகள் இங்கு,
தலைவிரித்தாடுகிறதே!
கண்ணில்தெரியா,
எதிரியைத் தாக்கிட;
கோல் ஒன்றுக் கிடைத்திடுமோ!
மந்திரக் கோல் ஒன்றுக் கிடைத்திடுமோ!!

இறையவன் இதயம்;
கனிந்திட, இறங்கியேக்,
காத்திட வருவானோ?!
மனதினில் தேங்கிய,
அச்சம் நீங்கி;
வாழ்ந்திடுவோமோ!

—0—




# கொரோனா

காணொலியில் காணும் காட்சிகள் யாவும்,
கனவில் கண்டாலே பல நாள் பதறும்!
தொற்றே வந்து தூக்கிச் செல்லுமோ - என்றே
எண்ணி தூக்கமும் கலையும்!



உற்றோர் நெருக்கம் விலகிப் போனது;
நட்புக்கிடையேயும் ஆறடி புகுந்தது!
பங்கி உண்ணும் பழக்கம போனது!
நடமாட்டம் என்பது முழுதாய் நின்றது!





வாரா நோய் வந்ததாய் எண்ணி,
காதில் பட்டதெல்லாம் மருந்தென எண்ணி;
கசாயம் குடித்து வயிற்றை நிரப்பி,
நிரந்தரத் தீர்வை வலை தளத்தில் தேடினோம்!

தும்மலும், இருமலும், எமனாய்த் தெரிகிறது!
சோதிக்க வருபவரோ எதிரியாய் போனார்!
பிறந்தால் இறப்பு உண்டெனத் தெரியும்!
தெரிந்த இறப்பு முன்னே நின்றால்,

பாதம் நழுவிப் பூமியில் புதையும்!
உடல் தளர்ந்து வியர்வையில் நனையும்!
மாயமாய் வந்து மக்களைக் கொல்லும்;
கொரானா எனும் கொடுங்கோல் கோழையே,

படைத்தவனை விட்டு அடுத்தவனைக் கெடுப்பாய்
இன்னும் எத்துனை உயிர்களை,நின்றே பறிப்பாய்?





## ஆறாம் அறிவு

இதயத்தை மெதுவாய்,
வருடிக் கொடுக்கும்,
உறவுகள் போனது எங்கே?

துவண்டுக் கிடக்கும்;
தோளில் கையிட்டு,
துயரம் போக்கிய,
கைகள் போனதெங்கே?

மனம் விட்டுச் சிரித்து,
மனந்தனை மாற்றும்—அந்த
மருத்துவ தோழன் எங்கே?

முகந்தனைக் கண்டே,
மனநிலை அறிந்த— அந்த
அற்புத் தோழன் எங்கே?

கடளலவுக் கவலையும்,
கடுகாய்மாற்றிய, - அந்த
மாய மச்சான் எங்கே?

சிதறிய வாழ்கையைச்
சீராய் செதுக்கிய
சீரிய சிந்தனை தலைமை போனதெங்கே?

வறுமைப் போக்கி,
வளமை கொடுக்கும்
வார்த்தைகள் தந்தவன் எங்கே?

தனியொரு மனிதனாய்த்
தனியாய் நின்று,
தவிக்கின்றேன் இங்கே!

அவனவன் வாழ்க்கை,
அவனவன் உலகென;
மாறிப் போனதேனோ!

போதும் இறைவா!
ஆறாம் அறிவு இங்கே,
காக்கை குருவியாய்;
இணைந்தே வாழும்
ஐந்தறிவு வாழ்வே போதும்!

—0—

## தம்பிக்கு ஒரு பாட்டு

கானல் நீரை,
விரட்டிச் செல்லும்;
குருட்டுப் பயணமடா!
வாழ்க்கை குருட்டுப் பயணமடா!!

தேவையறிந்து,
உழைத்தேயுண்ணும்;
பழக்கம் போனதடா தம்பி! - மனதில்,
ஆசை புகுந்ததடா!



தனக்கென வாழும்;
கயமை மனதில்,
பதிந்துப் போனதடா
தம்பி!
கருனை மறைந்ததடா!

கடந்ததை மறந்து,
நடப்பதை நினைத்தால்;
வாழக்கைச் சிறக்குமடா!
போனது போகட்டும்,
வருவதை மாற்று;
வாழ்க்கை இனிக்குமடா!-தம்பி
மனதில்உறுதிக் கொள்ளடா!

ஆற்று நீராய்ச் செல்லும் வாழக்கை;
கடலாய் பொங்குமடா!
மனதில் கொஞ்சம் கவனம்
கொண்டால், பயணம் சிறக்குமடா!
போனது போகட்டும், வந்தது
வரட்டும்;
என்பது வாழ்க்கையடா!
வந்ததில் நல்லதைப்
பிடித்துக் கொண்டால்
வாழ்வே சிறக்குமடா!
==0==



## மனமிருந்தால்..!

கல்லையும்; முள்ளையும்;
கண்டு பயந்தால்,
காட்டைக் கடக்க முடியாது!

தொல்லையும்; துயரமும்;
கண்டு பயந்தால்,
வாழ்க்கை நடத்த முடியாது!

அலையென துயரம் வந்த போதும்,
தலை நிமிர்ந்து நின்றுவிடு!

அடித்தால் மரணம்!
விட்டால் வாழ்க்கை!
இது தான், வாழ்வின் நிலையாகும்!

மரணம் என்பது புதிதுமல்ல – அதனைத்
தடுக்க வழியுமில்லை!

பிறந்தால் சிரிப்பு!
இறந்தால் அழுகை!
ஏனிந்த முரண்பாடு?

பிறப்பும், இறப்பும், இயற்கையின் நியதி!
புரிந்துக் கொண்டால், குழப்பமில்லை!
பிறப்பு என்பதும்; உன்னிடமில்லை!
இறப்பு என்பதும்; உன் வசமில்லை!

இடை நின்ற காலம் உனதாகும்!
வாழ்வதும் வீழ்வதும் உன் முடிவாகும்!
— 0 —

## ஏக்கங்கள்!

மார்கழியில்,
சித்திரைக்காக ஏக்கம்!
வெயிலில்,
குளிருக்காக ஏக்கம்!
இரவின் பயத்தில்;
பகலுக்காக ஏக்கம்!

பகலின் உழைப்பால்,
இரவுக்காக ஏக்கம்!
பகையால்,
உறவுக்காக ஏக்கம்!
உறவின் நெருக்கத்தால்;
தனிமைகாக, ஏக்கம்!

வறுமையில்,
செல்வத்திற்காய் ஏக்கம்!
செல்வத்தால்,
அமைதிக்காக ஏக்கம்!
பருவத்தில்,
காதலுக்காய் ஏக்கம்!

காதலில்,
கல்யாண ஏக்கம்!
மண வாழ்வில்,
குழந்தைகான ஏக்கம்!
ஆசைகள் தீர்வதில்லை!
ஏக்கங்கள்;
முடிவதில்லை!!
—0—

# பிள்ளை வளர்ப்பு

அழகான பிள்ளையைப் பெற்று;
அதை,
வளமாக வளர்பதில்;
தவறேதுமில்லை! - உன்
உறக்கம் கெடுத்து,
தாலாட்டுப்பாடி;
துயல் கொள்ள செய்!
தவறேதுமில்லை!!

வெள்ளிக் கிண்ணத்தில் பாலூட்டி,
தங்கத் தட்டில் உணவூட்டு;
தவறேதுமில்லை!
தத்தி நடக்கையில் உடன் ஓடு!
அதன்,
மழலை மொழி கேட்டு மகிழு!
தவறேதுமில்லை!!

ஆகச் சிறந்த பள்ளி கண்டு,
அறிவார்ந்ந கல்விக் கொடு!
தவறேதுமில்லை!!
நல்ல உயர் கல்விக் காண,
அயல் தேசம் அனுப்பு;
தவறேதுமில்லை!

குணமான பெண் கண்டு,
மணவாழ்வு காணச் செய்!
தவறேதுமில்லை!

இத்துனை கடமைகள்- நீ
செய்யும் போதே,
உன் நலனும்; உன்நிலையும்;
தவறாமல் நினைவில் கொள்!


ஆயிரத்தில் பிள்ளைக்குச்,
செய்யும்போதே,
சில நூறாவது உனகென்று;
சேர்த்துக் கொள்!

பின்னாளில் மகன் பார்பானென்று,
அசடாக வாழ்க்கையை முடிக்காதே!
அவன் பிள்ளையை வளர்க்கவே,
காலம் போதாது அவனுக்கு!

—0—



# உழைத்து உண்!




மாடு ஓட்டி உழுது பாரு;
உழைப்பின் உயர்வு புரியும்!
நாத்து நடவே குனிந்துப் பாரு;
உணவின் மகிமை தெரியும்!

காலில் ஒட்டும் சகதி தான்டா,
பாதி வயிற்றை நிரப்பும்!
விளைஞ்ச நெல்லை தொட்டுப் பாரு;
மனசெல்லாம் நிறையும்!

வெற்று நிலமல்ல விளையும் பூமி -அது
வயிற்றை நிரப்பும் உணவுக் கலயம்!


ஒற்றை பருக்கை உணவைக் கூட,
வீனாய் விட்டு விடாதே! – அந்த;
ஒற்றை நெல் மணி விளைந்து வர,
சொட்டிய வியர்வை மிக அதிகம்!



விவசாயம் என்பதே உலகைக்
காக்கும் நல்ல உபயம்! – நித்தம்
இதனை;
உணர்ந்து நடந்தால்,
உலகம் இனி ஊய்க்கும்!

—0—

# நலமாய் வாழ!



உண்மையைச் சொல்லவும்;
நேர்மையாய் வாழவும்,
உறுதி வேண்டுமடா!
உள்ளத்தில் உறுதி வேண்டுமடா!

பொன்னுக்கும், பொருளுக்கும்,
புகழெனும் மாயைக்கும்;
ஆசைப்படாத மனசு வேண்டுமடா!
தெளிந்த மனசு வேண்டுமடா!

பெண்ணுக்கும், மண்ணுக்கும்,
மயங்கிடாமல் வாழந்திட,
சிந்தனை வேண்டுமடா!
சலனமில்லாச் சிந்தனை வேண்டுமடா!

அத்துனை குணங்களும்;
ஒன்றாய் அமைந்திட,
கல்வி வேண்டுமடா!
நல்ல கல்வி வேண்டுமடா!



கல்லாமை எனும்;
இழி நிலை நீங்கிட்டால்,
வல்லமைப் பெருகுமடா!- பின்
நல்லவை வெல்லுமடா!!

—0—

# கனவினிலே!

கனவினிலே மிதந்து,
கனவினிலே வாழ்ந்து,
நனவினை மறந்தக்
கூட்டமொன்று உண்டு!

பட்டக் கடன் பெருகி வந்து,
பாடாய் படுத்தும் வரை;
உண்மை நிலையறியாத,
கூட்டமொன்று உண்டு!

உடல் வலிக்க உழைப்பதில்லை!
மனம் நிறைய வாழ்வதில்லை!
தினம் ஒரு குற்றம் கண்டு,
மனதினில் குமைந்திடுவார்;
தன்னிலை அறியாத,
கூட்டமொன்று உண்டு!

அடுத்தவன் வாழ்வு தனை;
வாழ்ந்திட நினைத்து,
இருப்பதை இழந்து,
குலைந்திடும்;
கூட்டமொன்று உண்டு!

வலியவரைக் கண்டு,
நடுங்கிச் சாவார்!
எளியோரைக் கண்டால்,
சருகாய் மிதிப்பார்!
உண்னை அன்பு புரிவதில்லை!
அரவனைத்துச் செல்வதில்லை!!

காலம் கடந்தப் பின்னே,
கருணைக்காய் ஏங்கிடுவார்!
செய்ததை எண்ணி,
செயல் மறந்து நின்றிடுவார்!
செய்த பாவம் போக்கிடவே,
இறைவனை நினைத்திடுவார்!

